**Source:** *Tamil Murasu*, p5
**Date:** 26 September 2026

# மதிப்பெண்களுக்குத் தொடரும் முக்கியத்துவம்

**யோகிதா அன்புச்செழியன்**

பிள்ளைகளுக்கு உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கும் சிங்கப்பூர்ப் பெற்றோர் கல்வியைத் தாண்டி நற்பண்புகள், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கே முதன்மையான முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

இருப்பினும், தொடக்கப் பள்ளி இறுதியாண்டுத் தேர்வு, பள்ளிகளின் சேர்க்கைப் புள்ளிகள் மீதான அவர்களின் பாரம்பரியப் பிடிப்பு இன்னமும் தளரவில்லை.

கொள்கை ஆய்வுக் கழகம் (ஐபிஎஸ்) அண்மையில் வெளியிட்ட 'சிங்கப்பூரில் பெற்றோரும் பள்ளிக் கல்வியும்' எனும் புதிய ஆய்வறிக்கை பெற்றோரின் இந்த முரண்பட்ட மனநிலையைக் காட்டுகிறது.

பள்ளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்களைப் பொறுத்தவரை, 95 விழுக்காட்டுப் பெற்றோர் பள்ளிகளில் கற்பிக்கப்படும் நற்பண்புகள், விழுமியங்களுக்கும், 91 விழுக்காட்டினர் ஒழுக்கத்திற்கும் முன்னுரிமை அளிக்கின்றனர். இதற்கு அடுத்தபடியாக 85 விழுக்காட்டினர் போக்குவரத்து வசதியைக் கருத்தில் கொள்கின்றனர்.

இத்தகைய முழுமையான அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளித்தாலும் கல்வி ரீதியான அளவீடுகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன. 75.8 விழுக்காட்டுப் பெற்றோர் பள்ளிகளின் சேர்க்கைப் புள்ளிகளை இன்னும் ஒரு முக்கியமான காரணியாகவே கருதுகின்றனர்.

தொடக்கப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வானது (பிஎஸ்எல்இ) மாணவர்கள் தங்களின் இலக்குகளை நிர்ணயிக்கவும் உயர்நிலைப் பள்ளிக்குத் தயாராகவும் உதவும் ஒரு முக்கிய மைல்கல் என 80 விழுக்காட்டிற்கும் அதிகமான பெற்றோர் நம்புகின்றனர்.

இத்தேர்வு முறையில் சில மாற்றங்கள் தேவை என 73.7 விழுக்காட்டினர் விரும்பினாலும், பிஎஸ்எல்இ தேர்வை முழுமையாக ரத்து செய்யக் கூடாது என்ற நிலைப்பாட்டையே பெரும்பாலானோர் (45.6 விழுக்காடு) கொண்டுள்ளனர். அதற்குப் பதிலாக, குறைந்த அழுத்தத்தைக் கொடுக்கும் ஒரு மதிப்பீடாக அது தொடர வேண்டும் என்றே அவர்கள் விரும்புகின்றனர்.

இதற்கிடையே, புதிய மதிப்பீட்டு முறை குறித்துப் பெற்றோரிடையே அதிருப்தியும் காணப்படுகிறது. இந்த முறை இன்னும் கணிசமான மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாக 85.6 விழுக்காட்டுப் பெற்றோர் உணர்கின்றனர்.

மேலும், இந்தப் புதிய முறையின் பரந்த மதிப்பெண் பிரிவுகளால் தங்களது பிள்ளைகள் விரும்பும் பள்ளிகளில் இடம் கிடைப்பது கடினமாகிவிட்டதாக 66.3 விழுக்காட்டினர் குறிப்பிட்டுள்ளனர்.

பிஎஸ்எல்இ தேர்வில் பிள்ளைகள் எதிர்பார்த்த தேர்ச்சியைப் பெறமாட்டார்கள் என்ற அச்சம் நிலவினால் நேரடிப் பள்ளிச் சேர்க்கைத் திட்டம் ஒரு பயனுள்ள மாற்று வழியாக இருக்கும் என 78.2 விழுக்காட்டுப் பெற்றோர் கருதுகின்றனர்.

இருப்பினும், 75.8 விழுக்காட்டினர் தங்களது பிள்ளைகள் வழக்கமான பிஎஸ்எல்இ தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளிகளில் சேர்க்கப்படுவதையே தாங்கள் இன்னமும் விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.



சிங்கப்பூரில் 'பெற்றோரும் பள்ளிக் கல்வியும்' என்ற தலைப்பிலான புதிய அறிக்கையை கொள்கை ஆய்வுக் கழகம் வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 25) வெளியிட்டுள்ளது.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.